# ஈழத்தமிழர் மரபுவழித் தாயகத்தில் பாதியை [50%] சிங்களவர் அபகரித்த வரலாறு




**மறவன்புலவு க. சச்சிதானந்தன்**

*கொழும்பு கடற்றொழில் திணைக்கள ஆய்வு அலுவலராகவும்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும்*
*23 நாடுகளில் ஐ.நா. உணவு வேளாண்மை நிறுவன ஆலோசகராகவும் பணிபுரிந்தவர்.*

பதிப்பு: காந்தளகம்
834 அண்ணா சாலை, சென்னை 600 002

*விலை: 3.00*




படம் : கோல்புறூக் ஆணைக்குழுவின் அறிக்கையுடன்
இணைக்கப்பட்ட இலங்கைப் படம் (கி.பி. 1832)

இந்தப்படத்தில் கிழக்கு மாகாணத்தின் தெற்கெல்லையாகக் கும்புக்கன் ஆறும் மேற்கு எல்லையாக மாவலிகங்கையும் குறிப்பிடப்பட்டு, வேடர்கள் வதியும் விந்தனைக் காடு கிழக்கு மாகாண நிலப் பகுதிக்கு உரியதாகக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை ஓர் அழகான தீவு. இந்தியத் துணைக் கண்டத்தின் தெற்கே மாம்பழ வடிவத்தில் இத்தீவு உள்ளது. இந்தியாவையும் இலங்கைத் தீவையும் பிரிக்கும் கடல்கள், வடக்கே பாக்கு நீரிணை; தெற்கே மன்னார்க்குடா.

இராமேச்சரம் தீவு, இராமர் அணை, மன்னார்த் தீவு ஆகியன பாக்கு நீரிணையையும், மன்னார்க் குடாவையும் பிரிக்கின்றன.

தீவின் தெற்கே இந்துப் பெருங்கடல்; தென் துருவ நிலப்பகுதி வரை கடல் தவிர வேறில்லை.

கிழக்கே வங்காள விரிகுடா; சுமாத்ரா வரை அகன்று பரந்துளது.

தீவின் வடக்கே 40 கிலோ மீட்டர் தொலைவில் தமிழகம் உள்ளது.

தீவின் நடுப்பகுதி மலைப்பாங்கான, மழை வீழ்ச்சியுடைய, வளப்பமான நிலங்கள். தீவின் கிழக்கும், வடக்கும், வடமேற்கும் ஆங்காங்கே குன்றுகள் சிதறிக் கிடக்கும் சமவெளிகள்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் மனிதர் அத்தீவில் வாழ்ந்து வருகின்றனர். வேடர்களாய், மந்தை மேய்ப்பவர்களாய், வாழ்ந்த கற்கால, உலோக கால மக்களைப் பற்றிய தொல்லியல் தடயங்கள் தீவடங்கிலும் உள.

பெண்களை மணந்தமையும் இத்தீவின் வரலாற்று நிகழ்வுகள்.

தமிழகத்திலும், இலங்கைத் தீவிலும் தமிழர்களே பரந்து வாழ்ந்ததும், இந்த இளவரசன் விஜயனின் வருகையால் தீவில் புது மொழியாளர் பெருமளவில் குடியமர்ந்ததும் வரலாற்றுத் திருப்புமுனை. (கி.மு. 1000 அளவில்)

அசோகப் பேரரசு காலத்தில், கி.மு. 400 அளவில், தமிழகமும், இலங்கையும் புத்த மத மாற்றத்தின் நிலைக்களனாயின.

அசோகப் பேரரசரின் மகன் மகிந்தன் இலங்கைக்கு வந்து தீவின் மன்னனைப் புத்தனாக்கிய வரலாற்றுச் செய்தி உண்டு. பின்னர் அசோகனின் மகள் சங்கமித்திரை, கயாவிலிருந்து வெள்ளரசுக் கிளையுடன் இலங்கைக்கு வந்ததும், அதனை அனுராதபுரத்தில் நட்டதும், வரலாற்று நிகழ்வுகள். அந்த அரசமரம் இன்றும் அனுராதபுரத்தில் உளது.

அசோகப் பேரரசு காலத்தையொட்டி இலங்கையிலே வடமொழி, பாளி மொழி, கலிங்க மொழி, தமிழ் மொழி அனைத்தையும் இணைத்த ஒரு புதிய மொழி உருவாகி வளர்ச்சி பெற்று வந்தது.

அந்த மொழியை இளவரசன் விஜயனோடு இணைத்துப் பிற்காலத்தில் சிங்கள மொழி என அழைத்தனர்.

> **"தெற்கே கடல், வடக்கே தமிழர், நான் எப்படி நீட்டி நிமிர்ந்து படுக்க முடியும்" என்று கேட்ட இளவரசன் துட்டகாமினி.**

இந்தத் தொல்லியல் தடயங்களும், இதே காலங்களில் தமிழ்நாட்டில் வாழ்ந்த மக்களின் தொல்லியல் தடயங்களும் ஒத்தவை எனத் தொல்லியலார் குறித்துள்ளர்.

பின்பு வந்த எழுத்துப் படிமங்களும் கல்வெட்டுச் சான்றுகளும் இலங்கைத் தீவிலும் தென் இந்தியாவிலும் ஒத்தவையாக இருந்ததையும் தொல்லியலார் கூறுவர்.

இலங்கைத் தீவிலும் தமிழகத்திலும் தமிழரே தொல்குடி மக்கள் என்பதை இத்தொல்லியல் சான்றுகள் நிறுவும்.

சிவன், மூத்த சிவன் ஆகிய தமிழர்கள் அரசர்களாக இருந்த செய்திகள் தீவின் வரலாற்றில் உள.

வங்கம்/கலிங்கம் சார்ந்த இளவரசனும் அவனது குடிமக்களும் இத்தீவிற்கு வந்தமையும் பாண்டியப்

கரிகாற் சோழன் காலத்தில், கி.மு. 300 அளவில், இலங்கை மீது சோழப் படையெடுப்பு நிகழ்ந்ததும், ஆற்றை மறித்து அணை கட்டத் தொழில் நுட்பத்தையும், அதற்குரிய ஆள் அணியையும் கரிகாலன் இலங்கையிலிருந்து தமிழகம் கொண்டு சென்றதும் காவிரிக்குக் குறுக்கே கல்லணையைக் கட்டியதும் வரலாறு. கரிகாலன் படையெடுப்பைத் தொடர்ந்து இலங்கையில் நிலைகொண்ட சோழச்சிற்றரசர் வழிவந்து, தன்னாட்சியுடைய தமிழ்மன்னனாக நிமிர்ந்தவன் எல்லாளன். தீவு முழுவதையும், கி.மு. 161-117 காலப்பகுதியில், எல்லாளன் ஆட்சி செய்தவன்.

"தெற்கே கடல், வடக்கே தமிழர், நான் எப்படி நீட்டி நிமிர்ந்து படுக்க முடியும்" என்று கேட்ட சிங்கள இளவரசன் துட்டகாமினி. பெயரிலேயே துட்டன் என்ற அடைமொழி கொண்டவன்.

எல்லாளனுடன் போரில் மோதி, தோல்வி யடைந்த நிலையில், வயது முதிர்ந்த அத்தமிழ் மன்னனை இளைஞனான சிங்கள இளவரசன் தனிச்சமருக்கு அழைத்து, வெட்டி வீழ்த்தித் தமிழ் அரசைக் கைப்பற்றினான்.

சிங்கள - தமிழ் எதிர்ப்பு உணர்வின் தொடக்க நிகழ்வு அதுதான். தமிழரின் தலைநகரான அனுராத புரத்தைச் சிங்களவர் கைப்பற்றித் தமது தலை நகராக்கினர்.

இலங்கைத் தீவில் தமிழரின் நிலத்தைப் போரில் கைப்பற்றிச் சிங்கள நிலமாக்கிய முதல் நிகழ்ச்சி அதுதான்.

இதைத் தொடர்ந்து சிங்களவரும் தமிழரும் அந்தத் தீவில் தமக்குரிய நிலப்பகுதிகளை தனித் தனியே வைத்திருக்கத் தொடங்கினர்.

தமிழகத்துக்கு அண்மித்தவையாயும், கரையோரங் களாகவும், சமவெளிகளாகவும் உள்ள பகுதிகள் தமிழர் நிலப்பகுதிகள்.

மலைப்பாங்கான நடுப்பகுதியும், தமிழகத்திற்கு எட்டாத தெற்குப் பகுதியும் சிங்கள நிலப்பகுதிகள்.

தமிழகத்தில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் வைணவ சைவ மதங்களை மீளவும் தமிழ் மக்களின் சமயங்களாக மாற்றிய காலப் பகுதியில், கி.பி. 550-800, இலங்கைத் தீவிலும் சைவ சமய மறு மலர்ச்சி ஏற்பட்டது.

சைவ சமய மறுமலர்ச்சியால் இலங்கைத் தீவில் வாழ்ந்த தமிழர் பலர் மீளவும் சைவ சமயிகளாயினர்.

புத்தர்களாய் இருந்தவர்களோ, தமிழை விட்டு, சிங்கள மொழியை மட்டும் புத்தத்துக்குரிய மொழி யாக்கி கொண்டனர்.

இராஜ இராஜ சோழன் காலத்திலும், இராஜேந் திர சோழன் காலத்திலும், கி.பி. 993-1070 அளவில், நடந்த படையெடுப்புகள் தீவு முழுவதை யும் தமிழர் ஆட்சிக்குள் கொண்டு வந்தன.

பொலன்நறுவையில் சோழர் தலைநகரம் அமைந்தது. சிங்களவர் தெற்கு நோக்கிச் சென்றனர்.

தீவின் மலைப்பகுதியும், தென் பகுதியும் சிங்கள வரின் வாழ்வு நிலங்கள் ஆயின. கிழக்கேயும், வடக்கேயும், வடமேற்கேயும் உள்ள சமவெளி நிலங்கள் தமிழர் நிலங்களாயின.

சிங்கள - புத்தர் தென் பகுதியையும், மலைப் பகுதியையும் கொண்டிருக்க சைவர்களாகிய தமிழர்கள் கிழக்கு, வடக்கு, வடமேற்கு சமவெளி களைத் தமதாக்கினர்.

மீண்டும் சிங்கள அரசுகள் வலிமை பெற்றிருந்தும் கூட தமிழர் நிலங்களில் மேலாட்சி செலுத்த முடிய வில்லை.

பின்பு பாண்டியர், கி.பி. 1215இல் இலங்கைத் தீவு மீது படையெடுத்தனர். பாண்டியர் படை யுடன் சென்றபொழுது சிங்கள அரசு மேலும் தெற்கு நோக்கிப் பின் வாங்கியது. கண்டியிலும், கோட்டையிலும் சிங்களத் தலைநகரங்கள் அமைந்தன.

தமிழர் தலைநகர் சோழர் காலத்தில் பொலன் நறுவையில் இருந்தது. பாண்டிய படையெடுப் போடு வடக்கே யாழ்ப்பாணத்திற்கு மாறியது.

### மூன்று அரசுகள்

இலங்கைத் தீவில் அப்பொழுது 3 அரசுகள் அமைந்தன. தென் மேற்குக் கரையோரத்தையும், தெற்குக் கரையோரத்தையும் ஆட்சி செய்தது கோட் டைச் சிங்கள அரசு. மத்திய மலைப் பகுதியை ஆட்சி செய்தது கந்த உடரட்டைச் சிங்கள அரசு. கிழக்கு, வடக்கு, வடமேற்குச் சமவெளிகளை ஆட்சி செய்தது தமிழ் ஈழ அரசு.

இந்த நிலை மேனாட்டவர், கி.பி. 1605 அளவில், இலங்கைத் தீவிற்கு வரும் வரையும் வந்த பின்பு சில காலமும் தொடர்ந்தது.


கோட்டையைத் தலைநகராகக் கொண்டது கோட் டைச் சிங்கள அரசு. இது 1605இல் போர்த்துக் கேயரிடம் வீழ்ந்தது.

நல்லூரைத் தலைநகராகக் கொண்டது தமிழீழ அரசு. இது 1619இல் போர்த்துக்கேயரிடம் வீழ்ந்தது.


கண்டியைத் தலைநகராகக் கொண்டது கண்டி உடரட்ட அரசு. இது 1815 இல் ஆங்கிலேயரிடம் வீழ்ந்தது.

இராஜ இராஜ சோழன் காலத்திலும், இராஜேந்திர சோழன் காலத்திலும், கி.பி. 993-1070 அளவில், நடந்த படையெடுப்புகள் தீவு முழுவதையும் தமிழர் ஆட்சிக்குள் கொண்டு வந்தன.


## கிழக்கு மாகாணம்





## திருகோணமலை மாவட்டம்.




## மட்டக்களப்பு மாவட்டம்
(1963 வரை இன்றைய அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கியது)




## மட்டக்களப்பு மாவட்டம்
(புதிய அம்பாறை மாவட்டம் நீங்கலாக)




## அம்பாறை மாவட்டம்
(1963க்குப்பின் தனிமாவட்டம்)



போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் தீவின் கரை யோரப் பகுதிகளைக் கைப்பற்றிய பின்னர், தமது ஆட்சியைத் தமிழருக்குத் தனியாகவும் சிங்கள வருக்குத் தனியாகவும் அமைத்தனர்.

கிரேக்கப் புவியியலாளர் தாலமி தொடக்கம், அண்மையில் வந்து சென்ற ஆங்கிலேயர் வரை, தமது குறிப்புகளிலும் வரைபடங்களிலும் சிங்கள நிலப்பகுதியைத் தனியாகவும், தமிழர் நிலப் பகுதியைத் தனியாகவும் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

சிங்களவர் தமது ஆட்சிப் பிரிவுகளை 'ரட்டை' என அழைத்தனர். தமிழர் தமது ஆட்சிப் பிரிவுகளை 'வன்னிமை' என அழைத்தனர்.

ராஜரட்டை, மாயரட்டை, உடரட்டை உருகுணு ரட்டை என்பன சிங்கள ஆட்சிப் பிரிவுகள்.

யாழ்ப்பாணம், வன்னி, கொட்டியாறு, பழுகாமம், பாணமை, முத்துச்சலாபம் என்பன தமிழர் ஆட்சிப் பிரிவுகள்.

இவை பெரிய பிரிவுகள். இவற்றுள் பல உட் பிரிவுகள். சிங்களப் பகுதியில் கோறளை; தமிழ்ப் பகுதியில் பற்று என இருந்தன. ஊர்கள் சிறு ஆட்சி அலகுகளாயின.

பகுதிகளாக உள்ளடக்கப் பெற்றன. திருகோணமலை, மூதூர், மட்டக்களப்பு வேடரின் - விந்தனை, உகந்தை, குமணை, யாலை யாவும் இம்மாகாணத்துடனிருந்தன. (தலைநகர்-மட்டக்களப்பு)

மேல் மாகாணம் - கற்பிட்டி, புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, கோட்டை, பாணந்துறை, களுத்துறை என நீண்டும், குருநாகலை வரை அகன்றும் இருந்தது. (தலைநகர்-கொழும்பு)

தென்மாகாணம் - காலி, தங்காலை, மாத்தறை, அம்பாந்தோட்டை என நீண்டும் இரத்தினபுரி வரை அகன்றும் இருந்தது. (தலைநகர்-காலி)

மத்தியமாகாணம் - கண்டி, உடநுவரை, ஊவா ஆகிய மலைப்பகுதிகளைக் கொண்டிருந்தது. (தலைநகர்-கண்டி)

இந்த ஐந்து மாகாணங்களுக்கும் ஐந்து அரச அதிபர்களை அமர்த்தினர். கொழும்பில் உள்ள ஆங்கிலேயே ஆளுநர் இவ்வரசு அதிபர்களின் தலைவர்.

ஒரு தமிழ் அரசு, இரு சிங்கள அரசுகள் ஆகியன ஒல்லாந்தர் ஆட்சியில், தமிழ் ஆட்சிப் பகுதி, கரையோரச் சிங்கள ஆட்சிப் பகுதி, கண்டிச் சிங்கள அரசு என மாறிப் பின்னர் ஆங்கிலேய ஆட்சியில், ஒரே ஆட்சியாக ஐந்து மாகாணங்களாகப் பிரிந்தன.

கிரேக்கப் புவியியலாளர் தாலமி தொடக்கம், அண்மையில் வந்து சென்ற ஆங்கிலேயர் வரை, தமது குறிப்புகளிலும் வரைபடங்களிலும் சிங்கள நிலப்பகுதியைத் தனியாகவும், தமிழர் நிலப் பகுதியைத் தனியாகவும் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

1796 இல் ஆட்சிக்கு வந்த ஆங்கிலேயர், 1815 இல் கண்டி அரசின் வீழ்ச்சிக்குப் பின் இலங்கைத் தீவு முழுவதையும் ஒரே ஆட்சிக்குள் கொணர்ந்தனர். இரண்டாக மூன்றாகப் பிரிந்திருந்த ஆட்சி ஒன்றாகி ஒற்றையாட்சியாகியது 1815க்குப் பின்னர்தான்.

இந்த ஒற்றையாட்சிக்குச் சட்ட வடிவம் 1833 அக்டோபர் 1ல் வந்தது. கோல்புறூக் - கமரோன் ஆட்சிச் சீர்திருத்தங்களுக்கு அமைய, தீவு முழுவதும் ஒரே ஆட்சியில் ஐந்து மாகாணங்களாயிற்று.

### ஐந்து மாகாணங்கள்

வடமாகாணம், நுவரகலவியையும் உள்ளடக்கி அமைந்தது. அனுராதபுரமும் யாழ்ப்பாணமும் வவுனியாவும் மன்னாரும் இம்மாகாணத்துள் இருந்தன. (தலைநகர்-யாழ்ப்பாணம்)


கிழக்கு மாகாணத்துள் தம்பன் கடவை, விந்தனை, கொட்டியாறு, பழுகாமம், பாணமை யாவும் தமிழ்ப்


### ஒன்பது மாகாணங்கள்

1845இல் வடமேல் மாகாணம் பிறந்தது. புத்தளம், சிலாபம், ஏழு கோறளைகள் கொண்ட இப்பிரிவுக்குத் தலைநகர்-குருநாகல்.

1873இல் வடமத்திய மாகாணம் பிறந்தது. நுவரகலவிய மாவட்டம் வடமாகாணத்தில் இருந்தும், தம்பன் கடவை மாவட்டம் கிழக்கு மாகாணத்தில் இருந்தும் கொடுக்கப் பெற்றன. வடமாகாணத்தில் இருந்த தமிழ்ப்பற்று வடமேல் மாகாணத்துடன் இணைந்தது. தலைநகர்-அனுராதபுரம்.

1896இல் ஊவா மாகாணம் பிறந்தது. மத்திய மாகாணத்தின் வதுளைப்பகுதி, கிழக்கு மாகாணத்


1 நெடுந்தீவு
2 ஊர்காவற்றுறை
3 சங்கானை
4 சண்டிலிப்பாய்
5 தெல்லிப்பளை
6 கோப்பாய்
7 வடமராட்சி
8 பருத்தித்துறை
9 உடுவில்
10 வேலணை
11 யாழ்ப்பாணம்
12 நல்லூர்
13 சாவகச்சேரி
இந்திய இலங்கைக் கடல் எல்லை
யாழ்ப்பாணம் மாவட்டம்
பச்சிலைப்பள்ளி
கிளிநொச்சி மாவட்டம்
கரைச்சி
பூநகரி
முல்லைத்தீவு மாவட்டம்
துணுக்காய்
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு
மன்னார்
பாண்டியன்குளம்
நெடுங்கேனி
வவனியா மாவட்டம்
மாந்தை மேற்கு
வவனியா தெற்கு
(தமிழ்)
நானாட்டான்
(சிங்களம்)
முசலி
செட்டிகுளம்
பதவியா
குச்சவெளி
குமரன்கடவை
கெப்பிட்டி கொலாவ
திருகோணமலை மாவட்டம்
மொறவாவி
திருமலை-நகர்
மதவாச்சி
நுவரகம்பலம் மத்தி
வண்ணாத்தி வில்லு
தம்பலகமம்
கின்னியா
மூதூர்
அனுராதபுரம் மாவட்டம்
ஹொறவப் பொத்தானை
கந்தளாய்
சேருவலை
வடமத்திய மாகாணம்
மெதிரிகிரி
புத்தளம் மாவட்டம்
சறுவல கஸ்வாவி
பொலன்னறுவை மாவட்டம்
லங்காபுர
கோறளைப் பற்று
கிரிமெட்டி
புத்தளம்
ஆனைமடு
கோறளைப் பற்று வடக்கு




இலங்கைத்தீவில் தமிழர் மரபுவழித் தாயகத்தில் சிங்களக் குடியேற்றம்

தின் விந்தனைப் பகுதி என்பன ஊவாவுடன் சேர்ந்தன. தலைநகர்-வதுளை.

இவ்வாறாக ஒன்பது மாகாணங்கள், கொழும் பைத் தலைநகராக் கொண்ட ஒரே ஆளுநர் ஆட்சி யில் அமைந்தன. *1833* தொடக்கம் *1896*வரை இவ்வரைவுகள், மீள் வரைவுகள் ஏற்பட்டன.

இந்த மீள்வரைவுகளில் தீவின் இனப்பாகு பாட்டையும் மரபு வழித் தாயகங்களையும் ஆங்கி லேயர் கணக்கில் கொள்ளவில்லை. முத்துச் சலாப வன்னிமையை முதலில் மேல் மாகாணத்துடன் இணைத்தவர்கள், பின்பு ஏழு கோறளையுடன் சேர்த்து வடமேல் மாகாணமாக்கினர்.

அனுராதப்புரப் பகுதி சிங்களவருக்குரியதாயிருந் தும் யாழ்ப்பாணத்தைத் தலைநகராகக் கொண்ட தமிழ்ப் பகுதியோடு அதனை இணைத்தனர். தம்பன் கடவை என்ற தமிழ்ப்பகுதி, பின்னர் கிழக்கு மாகாணத்தில் இருந்து பிரித்து வடமத்திக்கு மாற்றப்பட்டது. அவ்வாறே வடமாகாணத்தின் தமிழ்ப் பற்று வடமேல் மாகாணத்துடன் இணைக்கப் பட்டது. கிழக்கு மாகாணத்தின் விந்தனை வன்னிமை பின்னர் ஊவா மாகாணத்துடன் சேர்ந்தது.

*1959*இல் மொனறாகலை மாவட்டம், *1961*இல் அம்பாறை மாவட்டம், *1978*இல் கம்பஹா, முல்லைத் தீவு, *1984*இல் கிளிநொச்சி ஆகிய ஐந்து மாவட்டங் கள் தோன்றின.

மாவட்ட எல்லைகள் மீள்வரைவு மட்டுமல்ல ஆட்சி வட்ட எல்லைகளும் மீளவரையப் பெற்றன. அவை பல முறை நிகழ்ந்தன.

**நிலப்பிரிவு, இனத்தொகுப்பு**

தீவின் மொத்த நிலப்பரப்பு *65,525* சதுர கி.மீற்றர். அதில் *71%* நிலம் சிங்களவர் மரபு வழித் தாயகம். *29%* நிலம் தமிழர் மரபுவழித் தாயகம் *(1901)*.

தீவின் மொத்தக் கடற்கரை நீளம் *1,770* கி.மீ. இதில் *35%* கடற்கரை சிங்கள நிலப்பகுதியை ஒட்டியும், *65%* கடற்கரை தமிழர் நிலப்பகுதியை ஒட்டியும் உள்ளது. *(1901)*

தீவின் மொத்த மக்கள் தொகை *(1995)* ஏறத் தாழ *180* லட்சமாகும்.

**சிங்களவர் தமது ஆட்சிப் பிரிவுகளை 'ரட்டை' என அழைத்தனர். தமிழர் தமது ஆட்சிப் பிரிவுகளை 'வன்னிமை' என அழைத்தனர்.**

இந்த ஒன்பது மாகாணங்களிலும் *20* மாவட் டங்கள் அமைந்திருந்தன.

**25 மாவட்டங்கள்**

*1955*இல் இந்த எல்லைகள் பாரிய அளவில் மாற்றம் பெற்றன.

விடுதலை பெற்ற ஒரு நாட்டின் வளர்ச்சிக் கேற்றவாறு ஆட்சி எல்லைகளை அமைக்கவேண்டும் என்ற கொள்கை மீள்வரைவுக்கு அடிப்படை.

*10,440* சதுர கி.மீற்றர் பரப்பளவுள்ள கிழக்கு மாகாணம் *9,931* சதுர கி.மீற்றர் *(-509)* பரப் பளவாய்ச் சுருங்கியது.

*10,352* சதுர கி.மீற்றர் பரப்பளவுள்ள வட மத்திய மாகாணம் *10,709* சதுர கி.மீ *(+356)* பரப்பளவாய் விரிந்தது.

*8,160* சதுர கி.மீற்றர் பரப்பளவுள்ள ஊவா மாகாணம் *8,477* சதுர கி.மீற்றர் *(+318)* பரப் பளவாக விரிந்தது.

சிலாபம் மாவட்டம் மறைந்தது. அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்கள் பிறந்தன.

சிங்களவர் *74%*, தமிழர் *25%*, ஏனையவர் *1%* என்ற மொழிவழி இனத் தொகுப்புடைய தீவு இலங்கை *(1981)*. *68.5%* பௌத்தர், *16%* இந்து, *7.6%* முஸ்லீம் *7.9%* கிறீஸ்தவம் என்ற மதத் தொகுப்பும் அங்கு உண்டு *(1981)*.

வளப்பமான, மழை வீழ்ச்சி அதிகமான, மலைப் பாங்கான, ஆறுகளும் குளங்களும் மிகுந்த நிலப் பகுதியே சிங்கள மரபு வழித் தாயகத்துக்கு உரியது. தேயிலை, றப்பர், காப்பி, தென்னை ஆகிய தோட்டப் பயிர்களுக்குரிய நிலங்கள் இங்கு உள.

வாடைக் காற்றுடன் வரும் மழையை மட்டும் நம்பி, வானம் பார்த்த சமவெளிகளைக் கொண்ட காய்ந்த நிலங்கள் தமிழர் மரபுவழித் தாயகத்தில் உள. ஆறுகள், குளங்கள் குறைவு. எனினும் தீவின் 65% கடற்கரையின் வளப்பம் தமிழர் களின் மரபுவழிச் சொத்தாகும்.

**முத்துச்சலாபம்**

முத்துப் சலாப வன்னிமை, மன்னாருக்குத் தெற்கே சிலாபத்துறையில் தொடங்கி, முன்னேஸ் வரம் கோவிலருகிலுள்ள சிலாபம் வரை நீண்ட

கடற்கரையை ஒட்டிய நிலப்பகுதி, கீழ் எல்லை வாய்க்கால் ஆறு.

இந்த நிலப்பகுதி முழுவதும் தமிழ்ச்சிற்றூர்கள். யாவரும் பரதவர்கள்; தமிழகத்து முத்துக் குளிப்புச் சமுதாயத்துடன் கொண்டும் கொடுத்தும் உறவாடிய மக்கள்.

முன்பு, தமிழக மன்னர்கள் பலர் இக்கரை யோரங்களில் முகாமிட்டு முத்துக்குளிப்பு நடத்தினர். யாழ்ப்பாண மன்னர், புத்தளத்தில் முகாமிட்டு முத்துக்குளிப்பு நடாத்தியதை அரபுப் பயணி இபன்பட்டுட்டா (1345) தமது பயண நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வன்னிமை, ஏழு கோறளையுடன் சேர்ந்து வடமேல் மாகாணமாக்கப் பெற்றுச் சிங்கள மரபு வழித் தாயகத்துடன் இணைக்கப் பெற்றுள்ளது.

1833இல் வடமாகாணத்துடன் இருந்த தமிழ்ப் பற்று 1873இல் வடமேல் மாகாணத்துடன் இணைக்கப் பெற்றது. அருவி ஆற்றின் தென் கரையில் இருந்து வாய்க்கால் ஆற்றின் வடகரை வரையும் நீண்ட முத்துச்சலாப வன்னிமையின் பெரும் பகுதி சிங்கள நிலப்பகுதியுடன் இணைந்துள்ளது.

**விந்தனை**

1833 கோல்புறுக் - கமரோன் ஆணைக்குழு வெளியிட்ட படத்தில் விந்தனை வன்னிமையும், பாணமை வன்னிமையும், பட்டிப்பளை ஆற்றுச் சமவெளி முழுவதும் கிழக்கு மாகாணத்துள் அமைந்திருந்தன. தமிழர் நிலப்பகுதியின் மேற்கெல்லையாக மாவலி கங்கையின் கிழக்குக் கிளை ஆறு காட்டப் பெற்றது.

பின்னர் மீள்வரையப்பட்ட எல்லைகள், கிழக்கு மாகாணத்தின் நிலப்பகுதியை ஊவா மாகாணத்திடமும், வடமத்திய மாகாணத்திடமும் தாரை வார்த்து விட்டன. பட்டிப்பளை ஆற்றை ஒட்டிய பகுதி மட்டும் மாத்தளை மாவட்ட எல்லையைத் தொடுமளவுக்கு அகன்றுள்ளது.

விந்தனைப் பகுதியை ஊவாவுடன் சேர்த்ததில் உள்ள முரண்பாட்டை 1976ல் தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழு சுட்டிக் காட்டியது. "தேர்தல் மாவட்ட வரையறையின் நோக்கங்களுக்கு, விந்தனைப் பற்றைக் கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியாகவன்றி, வேறு விதமாகக் கருதமுடியாது" என அந்த அறிக்கை வரிகள் கூறும்.

**சிங்களக் குடியேற்றம்**

ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்ற 1948இல் இருந்தே, இலங்கையின் இனத் தொகுப்புக்கும் நிலப் பரப்புக்கும் உள்ள தொடர்புகள் மாற்றம் பெற வேண்டும் என்ற கொள்கையுடன் கொழும்பு அரசு செயற்படத் தொடங்கிற்று.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர் நிலப்பரப்பின் இனத்தொகுப்பு விகிதத்தை மாற்றிக் கொண்டு வருகிறது.

எல்லை மீள்வரைவுகள் மூலம் தமிழர் நிலப்பகுதிகளைச் சிங்கள நிலப்பகுதிகளுடன் இணைத்து வருகிறது.

**கல்லோயாத் திட்டம்**

1952 முதல் பட்டிப்பளை ஆறு கல்லோயா எனச் சிங்களப் பெயராகியது. குறுக்கே அணை கட்டி சேனநாயக்கா சமுத்திரம் அமைக்கப் பெற்று, அந்த அணையில் வரும் நீர்ப்பாய்ச்சல் முழுவதும் சிங்களக் குடியேற்ற வாசிகளுக்குப் பயன்படக் கொழும்பு அரசு திட்டமிட்டுச் செயற்படுத்தி, 1961இல் அக்குடியேற்றத்தைப் பேணத் தனியாக அம்பாறை (அழகியபாறை) மாவட்ட மாக்கப் பெற்று பின்னர் அங்கு ஒரு தேர்தல் தொகுதியின் பெயரும் திகமடுல்லை எனச் சிங்கள மயமானது.

திட்டமிட்ட குடியேற்றத்துக்கு அரசின் ஆதரவு வரும்பொழுது, அரசு சார்பற்ற குடியேற்றவாசிகளாக வரும் சிங்களவரின் நில ஆக்கிரமிப்புகளுக்கு அரசு அதிகாரிகள் கண்களை மூடிக்கொண்டனர்.

ஒவ்வொரு இனக்கலவரத்தின் பொழுதும் இங்குள்ள தமிழ் ஊர்கள் மீது சிங்களக் குண்டர்கள் படையெடுத்துத் தமிழர்களை விரட்டி விடுவது வழமை. இதனால் பல தமிழ்க் கிராமங்களில் சிங்களவர் வந்து குடியேறினர்.

அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் மட்டும் கலவரங்களின் பொழுது அழிக்கப் பெற்ற 300க்கும் அதிகமான சைவக்கோவில்களின் விரிவான பட்டியலையும் சேத விபரங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மாவை சேனாதிராசா (1993) பாராளுமன்றத்தின் முன்

**யாழ்ப்பாண மன்னர், புத்தளத்தில் முகாமிட்டு முத்துக்குளிப்பு நடாத்தியதை அரபுப் பயணி இபன்பட்டுட்டா (கி.பி.1345) தமது பயண நூலில் குறிப்பிட்டுள்ளார்.**

வைத்தார். உகந்தையில் புகழ் பெற்ற முருகன் கோவில் உள்ளது. அதில் பூசை செய்து வந்த பிராமணர் விரட்டப் பெற்று, பௌத்த குருமார் பொறுப் பேற்றுளர். பக்கத்தில் புதிதாக அமைத்த பௌத்த விகாரையிலும் அவர்களே பூசை செய்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் 1948இல் 5%மாக இருந்த சிங்கள மக்கள் தொகை 1995இல் 24%மாக உயர் வதற்கு இந்தக் குடியேற்றத் திட்டத்தின் பங்களிப்பு முக்கியம்.

இப்பொழுது கருத்துரைத்த மீள்வரைவுத் திட்டத் தில் திகமடுல்லை தேர்தல் தொகுதி ஊவா மாகாணத் துடன் இணைக்கப் பெறும் எனக் கூறப் பெற்றது.

அதற்குச் சில தமிழர் தலைவர்களும் ஒப்புதல் கொடுத்துளர்.

**அல்லை - கந்தளாய்த் திட்டம்**

கல்லோயா குடியேற்றத் திட்டம் போல உரு வானதுதான் அல்லை - கந்தளாய் குடியேற்றத் திட்டம். இதுவும் 1952இல் திட்டமிடப் பெற்றது. திருகோணமலை மாவட்டத்துள் இருக்கும் இப் பகுதியில் சிங்களவர் பெருமளவில் குடியேற்றப் பெற்றனர்.

**பதவியாத் திட்டம்**

வடமத்திய மாகாணத்துடன் இணைந்த தம்பன் கடவையின் வட பகுதியே பதவியா என இன்று உளது. இந்தப் பகுதியிலும் தொடர்ச்சியான திட்டமிட்ட சிங்களவர் குடியேற்றத்தை அரசு நடைமுறைப்படுத்தியது.

திருகோணமலை மாவட்டத்தின் வடக்கே கொக் கிளாய்க் கடனீரேரிக்குத் தெற்கே உள்ள புல் மோட்டை முழுக்கத் தமிழர் வாழ்ந்த ஊர். கனிம வள மண் கடற்கரையை ஒட்டி உண்டு. அதை ஏற்றுமதி செய்ய அமைந்த அரசு நிறுவனம் மூலம் பல்லாயிரக் கணக்கான சிங்களவர் அங்கு குடி யேறினர். பதவி சிறிபுர என்ற ஆட்சி வட்டம் ஏற்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தின் எல்லையோரங் களில், தெற்கில் சேருவலை, மேற்கில் கந்தளாய், மொறவாவி, குமரன்கடவை, வடக்கே பதவிசிறிபுர யாவும் சிங்களவருக்காக அமைக்கப் பெற்ற ஆட்சி வட்டங்கள். பதவி சிறிபுரத்துக்குத் தென் மேற்கே பதவியா, வடமத்திய மாகாணத்தில் உளது.

**ஒவ்வொரு இனக்கலவரத்தின் பொழுதும் இங்குள்ள தமிழ் ஊர்கள் மீது சிங்களக் குண்டர்கள் படையெடுத்துத் தமிழர்களை விரட்டி விடுவது வழமை. இதனால் பல தமிழ்க் கிராமங்களில் சிங்களவர் வந்து குடியேறினர்.**

மெதிரிகிரி, லங்காபுர ஆகிய புதிய ஆட்சி மாவட்டங்கள் முன்பு தமிழ்ப்பகுதியாக இருந்தவை. தம்பன் கடவை வடமத்திய மாகாணத்துடன் இணைக் கப் பெற்றபொழுது கிழக்கில் இருந்து வடமத்தியுடன் சேர்க்கப் பெற்றவை. இங்குள்ள தமிழ்க்குடிகளைக் கலவர காலங்களில் அகற்றிச் சிங்களக் குடிகளை அமர்த்தினர்.

அதன் கிழக்கே உள்ள கந்தளாய் அல்லைப் பகுதிகளில் சிங்களவரை அரசு குடியேற்றி, கந்தளாய் என்ற புதிய ஆட்சி வட்டத்தையும் அமைத்தது.

சிங்களக் குடியேற்றம் மேலும் தொடர்ந்து, வடக்கே மொறவாவி, குமரன் கடவை ஆட்சி வட்டங்கள் சிங்களவருக்குரியதாயின.

அதே குடியேற்றம் கிழக்கே சேருவிலைக்கும் அகன்றது. சேருவிலையில் புராதன சோமாவதி சைத்திய பௌத்த கோவில் இருப்பதாக ஒரு 'கதை' யைக் கட்டி, அங்கு குடியேறிய சிங்களவருக்கு அந்த நிலத்தில் கலாச்சாரப் பற்று ஏற்படுமாறும் அரசு பார்த்துக்கொண்டது.

**கிடுக்கி வளைப்பு**

திருகோணமலையைச் சுற்றி ஒரு கிடுக்கியாக, குதிரை லாடமாக, சிங்களக் குடியேற்றங்களை அரசு அமைத்தது.

1976இல் இந்தக் குதிரைலாட வடிவப் பிரதேசம் தனித்தேர்தல் தொகுதியாகியது. சேருவிலை எனச் சிங்களப் பெயர் பெற்றுச் சிங்கள உறுப்பினர் மட்டுமே தெரிவாக ஏற்பட்டது.

**முசலி - மணலாறு**

எழுபதுகளில், அரசு வடமாகாணத்திலும் சிங் களக் குடியேற்றங்களைத் திட்டமிட்டது.

மன்னார் மாவட்டத்தின் தெற்கே முசலி ஆட்சி வட்டத்துள், முந்திரித் தோட்டச் செய்கைக்கென அரசு நிறுவனம் அமைத்து, காடுகள் வெட்டி சிங் களவர் பல்லாயிரக்கணக்கில் குடியேற்றப் பெற் றனர்.

வவுனியா மாவட்டத்தில், முல்லைத்தீவுக் கரை யோரத்தில் நாயாற்றுக் கடனீரேரியருகில் வந்து

விழுவது மணல் ஆறு. இதன் பெயரை வெலிஓயா என அரசு மாற்றியது. அங்கிருந்த காடுகளைச் சேனையாக்கி கமங்களாக்கி, சிங்களச் சிறைக்கைதிகளைக் கொணர்ந்து குடும்பங்களுடன் குடியேற்றியது.

### மீனவர் குடியேற்றம்

சிங்கள மீனவர் தென் மாகாணங்களில் இருந்து இடம் பெயர்ந்து கிழக்குக் கரைப் பகுதிகளை ஆக்கிரமிக்க, அந்த ஆக்கிரமிப்புகளுக்கு அரசு சட்ட வடிவு கொடுத்தது.

தீவின் கரையோரத்தில், சிங்கள நிலப்பகுதிக் குரிய கரையில், ஆழ்கடல் பகுதி மட்டுமே உண்டு. வாய்க்கால் ஆற்றுக்குத் தெற்கே காலி ஊடாக மாணிக்க கங்கை வரை கரையில் இருந்து கடலுள் இறங்கினால் திடீரென ஆழமாகும். 200க்கு மேற் பட்ட பாகங்கள் ஆழமாகும்.

தமிழர் நிலப்பகுதிக் கரையோரத்தில் கடனீ ரேரிகள் பல உள. கடலும் படிப்படியாகவே ஆழமாகிச் செல்லும். கரையில் இருந்து சில கி.மீற்றர் தூரத்துக்கு அப்பால் தான் 200 பாகத் துக்கு மேல் ஆழங்கள் அதிகரிக்கும். திருகோண

இடம் பெயர் சிங்கள மீனவர்களுக்கு அரசு ஆதர வளித்தது. வசதிகள் செய்தது. குடியமர் சட்டக் கட் டமைப்புச் செய்தது.

### ஐந்து முனை ஊடுருவல்

அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் ஐந்து முனைகளில் அமைந்தது.

பட்டிப்பளை ஆற்று வழி அம்பாறை முதல் குமணை ஈறாக முதல் முனை.

அல்லை - கந்தளாய் - சேருவிலை இரண்டாவது முனை.

பதவியா - மணல் ஆறு மூன்றாவது முனை.

வில்பத்து - முசலி நான்காவது முனை.

மீனவர் ஆக்கிரமிப்புக்கள் ஐந்தாவது முனை.

### படிப்படியான பரப்புக்குறைவு

1833இல் கோல்புறூக் - கமரோன் மாகாண எல்லை வகுப்புக் காலத்தில் ஏறத்தாழ 26,500 சதுர கி.மீற்றர் பரப்பளவு நிலம் தமிழர் மரபு வழித்தாயக மாயிற்று.

சிங்கள மீனவர் தென் மாகாணங்களில் இருந்து இடம் பெயர்ந்து கிழக்குக் கரைப் பகுதிகளை ஆக்கிரமிக்க, அந்த ஆக்கிரமிப்புகளுக்கு அரசு சட்ட வடிவு கொடுத்தது.

மலைப் பகுதியில் மட்டுமே ஆழம் உடன் அதி கரிக்கும்.

வாடைக்காற்றுக் காலம் (ஐப்பசி-மார்கழி) தவிர்க்க ஏனைய மாதங்கள் முழுவதும் தமிழரின் நெய்தல் நிலம் தொழிலுக்குரியதாய் அமையும்.


இக்காலங்களில் மேற்கே முசலி, சிலாபத் துறை, தலைமன்னார்ப் பகுதிகளுக்கும் கிழக்கே நாயாற்றில் இருந்து கல்முனை வரை நீண்ட கடற் கரைக்கும் சிங்கள மீனவர் இடம் பெயர்வர். தொடக்கத்தில் தமிழ் மீனவர்களுடன் சேர்ந்து தொழில் செய்த இவர்கள் படிப்படியாகத் தமிழரை அவ்விடங்களில் இருந்து விரட்டத் தொடங்கினர்.

நாயாறு, கொக்கிளாய், குச்சவெளி, திருகோண மலை நகரம், இலக்கந்தை, வெருகல், பனிச்சன் கேணி, மாங்கேணி, புன்னைக்குடா, ஏறாவூர், மட்டக் களப்பு, சின்னமுகத்துவாரம், கோமாரி, திருக்கோவில் ஆகிய பகுதிகளில் இடம் பெயர் சிங்கள மீனவர் காலப்போக்கில் அங்கிருந்த தமிழ் மீனவர்களை விரட்ட முயன்றனர்.


1901இல் ஒன்பது மாகாணங்கள் அமைந்ததும் தமிழர் ஆட்சிப் பகுதியான வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் ஏறத்தாழ 19,100 சதுர கி.மீற்றர் பரப்பளவைக் கொண்டிருந்தன. முத்துச் சலாப வன் னிமையும் தம்பன் கடவையும் தமிழர் நிலப்பகுதியாக இருந்தமை, சிங்கள ஆட்சிப்பிரிவுக்குள் சேர்க்கப் பெற்றதால், ஏறத்தாழ 7,500 சதுரமைல் கி.மீற்றர் பரப்பளவு குறைந்தது.

1948க்குப் பின் அரசின் திட்டமிட்ட சிங்களக் குடி யேற்றத்தில் கிழக்கு மாகாணத்தில் ஏறத்தாழ 7,000 சதுர கி.மீற்றர் பரப்பளவையும் வடக்கு மாகாணத்தில் ஏறத்தாழ 500 சதுர கி.மீற்றர் பரப்பளவையும் தமிழர் எதிர்ப்பையும் மீறி, கொழும்பு அரசு சிங்களக் குடி யேற்றவாசிகளிடம் கொடுத்துள்ளது.

இவ்வாறு கடந்த 40 ஆண்டுகளில் சிங்களவர் கையகப் படுத்திய ஏறத்தாழ 7,500 சதுர கி.மீ. பரப் பளவையும் சிங்கள ஆட்சிப் பிரிவுகளுடன் சேர்த்துக் கொள்வது தான் அண்மையில் வெளியிடப்பெற்ற மாகாண எல்லை மீள்வரைவுக் கருத்துரையின் நோக்க மாகும்.



இலங்கை — மக்கள் தொகை
சமயிகள் விகிதங்கள்
பாக்கு நீரிணை
வங்காள விரிகுடா
மன்னார் வளைகுடா
இந்துப் பெருங்கடல்
இந்துப் பெருங்கடல்
ஆட்களின் எண்ணிக்கை
1,500,000
1,000,000
500,000
200,000
100,000
புத்தர்
இந்து-சைவர்
கிறிஸ்தவர்
முஸ்லிம்
பிற
மாகாண எல்லை
மாவட்ட எல்லை
0.1%
1.6%
69.3%
யாழ்ப்பாண மாவட்டம்
கிளிநொச்சி மாவட்டம்
முல்லைத்தீவு மாவட்டம்
மன்னார் மாவட்டம்
வவுனியா மாவட்டம்
திருகோணமலை மாவட்டம்
அநுராதபுரம் மாவட்டம்
பொலன்னறுவை மாவட்டம்
புத்தளம் மாவட்டம்
குருணாக்கலை மாவட்டம்
மாத்தளை மாவட்டம்
மட்டக்களப்பு மாவட்டம்
கண்டி மாவட்டம்
கேகாலை மாவட்டம்
கம்பஹா மாவட்டம்
கொழும்பு மாவட்டம்
நுவரெலி மாவட்டம்
வதுளை மாவட்டம்
அம்பாறை மாவட்டம்
மொனராக்கலை மாவட்டம்
களுத்துறை மாவட்டம்
இரத்தினபுரி மாவட்டம்
காலி மாவட்டம்
மாத்தறை மாவட்டம்
அம்பாந்தோட்டை மாவட்டம்
இ 77.9%
கி 15.8%
மு 4.9%
பு 90.2%
மு 7.3%
கி 1.3%
இ 1.2%
பு 90.1%
மு 5.3%
கி 3.3%
இ 1.3%
பு 90.1%
மு 6.5%
இ 1.8%
கி 1.5%
பி 0.1%
பு 78.6%
இ 11.6%
மு 7.4%
கி 2.4%
பு 73.6%
இ 12.7%
மு 11.1%
கி 2.6%
இ 50.3%
பு 41.6%
கி 5.6%
மு 2.5%
பு 71.1%
கி 23.4%
மு 3.5%
இ 1.9%
பி 0.1%
பு 70.4%
கி 11.8%
மு 9.9%
இ 7.7%
பி 0.2%
பு 92.7%
இ 4.7%
மு 2.0%
பி 0.6%
பு 68.8%
இ 24.3%
மு 4.6%
கி 2.3%
பு 84.8%
இ 11.6%
மு 1.9%
கி 1.7%
பு 97.1%
மு 2.2%
இ 0.5%
கி 0.2%
பு 94.6%
மு 2.6%
இ 2.4%
கி 0.4%
41.7%
37.4%
18.7%
2.1%
0.1%
66.2%
23.9%
7.1%
இ 68.7%
பு 16.5%
கி 7.7%
மு 7.1%
இ 31.6%
மு 29.8%
கி 6.1%
பி 0.2%
கி.மீ. 10 5 0 10 20 30 40 50



இலங்கை — மக்கள் தொகை
மொழி விகிதங்கள்
பாக்கு நீரிணை
வங்காள விரிகுடா
மன்னார் வளைகுடா
இந்துப் பெருங்கடல்
இந்துப் பெருங்கடல்
0.8%
ஆட்களின் எண்ணிக்கை
1,500,000
1,000,000
500,000
100,000
50,000
தமிழ்மொழி
சிங்கள மொழி
பிறமொழி
மாகாண எல்லை
மாவட்ட எல்லை
யாழ்ப்பாண மாவட்டம்
கிளிநொச்சி மாவட்டம்
முல்லைத்தீவு மாவட்டம்
த 94.7%
சி 5.2%
பி 0.1%
த 90.4%
சி 8.2%
பி 1.4%
மன்னார் மாவட்டம்
த 83.2%
சி 16.6%
பி 0.2%
வவுனியா மாவட்டம்
த 65.7%
சி 33.4%
பி 0.9%
திருகோணமலை மாவட்டம்
சி 91.1%
த 8.6%
பி 0.3%
அனுராதபுரம் மாவட்டம்
பொலன்னறுவை மாவட்டம்
சி 91.4%
த 8.4%
பி 0.2%
த 95.9%
3.4%
0.7%
மட்டக்களப்பு மாவட்டம்
புத்தளம் மாவட்டம்
சி 92.9%
த 6.9%
பி 0.2%
குருணாக்கலை மாவட்டம்
சி 79.9%
த 19.8%
பி 0.5%
மாத்தளை மாவட்டம்
24.9%
0.8%
கண்டி மாவட்டம்
சி 69.1%
த 30.2%
பி 0.7%
அம்பாறை மாவட்டம்
சி 0.3%
சி 85.9%
த 13.9%
பி 0.2%
சி 92.0%
த 6.6%
பி 1.4%
கம்பஹா மாவட்டம்
கேகாலை மாவட்டம்
த 57.4%
சி 42.1%
பி 0.5%
நுவரெலி மாவட்டம்
பதுளை மாவட்டம்
சி 92.7%
த 7.1%
பி 0.2%
மொனராக்கலை மாவட்டம்
சி 77.6%
த 20.4%
பி 2.0%
கொழும்பு மாவட்டம்
சி 85.0%
த 14.7%
பி 0.3%
இரத்தினபுரி மாவட்டம்
சி 87.2%
த 12.5%
பி 0.3%
களுத்துறை மாவட்டம்
காலி மாவட்டம்
மாத்தறை மாவட்டம்
அம்பாந்தோட்டை மாவட்டம்
த 5.5%
1.0%
கி.மீ. 10 5 0 10 20 30 40 50

1833க்கு முன்னர் 25% ஆன தமிழ் மொழி இனம் தீவின் நிலப்பரப்பில் 35% ஆன பரப் பளவைத் தம் மரபுவழித் தாயகமாகக் கொண்டு, ஆட்சி எல்லைக்குள் வைத்திருந்தது.

1901இல் இந்த நிலப்பரப்பு 35%இல் இருந்து 29%ஆகக் குறைந்தது.

1995இல் அதே 25% ஆன தமிழ்மொழி இனத்திடம் தீவின் 17% ஆன நிலப்பரப்பை மட்டும் தமிழ்மொழி இனத்தின் ஆட்சி எல்லைக் குள் வைத்திருக்க, தமிழ்மொழி இனத்தின் சட்ட ஒப்புதல் பெற, மாகாண எல்லை மீள்வரைவுக் கருத்துரைகள் முன் வந்துள.

நூற்றறுபத்து இரண்டு ஆண்டுகளில் (1833-1995) இலங்கைத் தீவில் தமிழரின் மரபுவழித் தாயகத்தில் 50% நிலப்பகுதியைச் சிங்களவர் படிப்படியாகக் கையகப்படுத்தி வந்துள்ளனர். தொடர்ந்து மேலும் புதிய நிலங்களைத் தமிழரிடம் இருந்து கைய்கப்படுத்தத் (எடுத்துக்காட்டு: மதுறு ஓயாத்திட்டம்) திட்டமிட்டு வருகின்றனர்.

## அட்டவணை ஒன்று

| மாகாணம் | தலைநகர் | பரப்பளவு சதுர கி.மீ. | | மக்கள்தொகை 1901 | |
|---|---|---|---|---|---|
| மேல் | கொழும்பு | 3705 | 6% | 920,683 | 26% |
| மத்தி | கண்டி | 5959 | 9% | 622,832 | 17% |
| தெற்கு | காலி | 5550 | 8% | 566,736 | 16% |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 8700 | 13% | 340,936 | 10% |
| கிழக்கு | மட்டக்களப்பு | 10440 | 16% | 173,602 | 5% |
| வடமேற்கு | குருநாகலை | 7750 | 12% | 353,626 | 10% |
| வடமத்தி | அனுராதபுரம் | 10352 | 16% | 79,111 | 2% |
| ஊவா | வதுளை | 8160 | 12% | 186,674 | 5% |
| சப்பிரகமுவ | இரத்தினபுரி | 4918 | 8% | 321,755 | 9% |
| மொத்தம் | | 65534 | | 3,565,955 | |

## அட்டவணை இரண்டு

### மொழிவழி இனங்களும் மாகாணங்களும் (1995)

| மாகாணம் | சிங்களமொழி | தமிழ்மொழி | பிறமொழி |
|---|---|---|---|
| மேல் | 83.0% | 14.0% | 3.0% |
| மத்தி | 59.0% | 40.5% | 0.5% |
| தெற்கு | 94.0% | 5.7% | 0.3% |
| வடக்கு | 4.5% | 95.0% | 0.5% |
| கிழக்கு | 24.5% | 75.0% | 0.5% |
| வடமேற்கு | 89.5% | 10.0% | 0.5% |
| வடமத்தி | 90.0% | 9.9% | 0.1% |
| ஊவா | 65.5% | 34.0% | 0.5% |
| சப்பிரகமுவ | 31.5% | 18.0% | 0.5% |